முருகப்பெருமான் துணை

**மகான் யாகோபு அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.04.2024**, செவ்வாய்கிழமை

1. ஞானபண்டிதன் சூட்சும வடிவான
ஞானியே ஆறுமுக அரங்கனே
தானதரும பலம்தனை கொண்ட
தவசியே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
ஆசிதனை சோபகிருது சேல் திங்கள்
அச்சமற இருபானேழ் திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 27 ம் நாள், 09.04.2024, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் யாகோபுச் சித்தர் யானும்
வையகம் நலம் பெற உரைப்பேன்
சோரமின்றி ஞானவான்கள் படை
செகமெல்லாம் உருவாக வேண்டி
4. வேண்டியே அரங்கன் நடத்தும்
வேள்வியாம் அன்னதான சேவை
தொண்டு வழி மக்களெல்லாம் வர
தேசிகனை குருவாய் ஏற்றுவர
5. வருகவே மக்களிடை தருமபலம்
வளர்ச்சிபொருந்திய வண்ணம்
வருமுலகில் பெருகிநின்று
வையகம் பாதுகாப்புதனை பெறும்
6. காப்புதரும் தரும வேலியிட்ட
கருணைமிக்க சன்மார்க்க நெறி
ஒப்புகொள்ள உலக மக்களுக்கு
ஓங்கார ஞானபலம் தரும்
7. தருகவே அன்னதான சேவையில்
தக்க பொருளுதவி செய்து
முருகா என செபதபங்கள் கூறி
முழுமைதரும் தீட்சை ஏற்க

8. ஏற்கவே அரங்கன் கரம்பட
இனிதே மகா சக்தியாக வந்து
அற்புதம் பல கண்டிடும் வண்ணம்
அனைத்தும் சித்திகளாக மாறி

9. மாறியே கலியிடர்களை வென்று
மண்ணுலகில் ஞானவான்கள் நிரம்ப
ஆறுதலாக ஞானத் தலைமை
அமையும்படி மாற்றம் நிகழும்

10. நிகழவே நிலவுலகம் எங்கும்
நீதி நெறி காக்கும் படியே
யுகமாற்றமாக ஞானயுகமாற்றம்
உயர்வாகக் கண்டு சிறந்து

11. சிறந்த ஞான ஆட்சியாக
சித்திமிகு ஞானிகள் ஆட்சியாக
பரந்த பேருலகம் எல்லாம் கண்டு
பாடிடுவேன் உலகமாற்றம் நிகழும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—